

# சங்கீதபூஷணம் . திரு .ச. பாலசிங்கம்
# அவர்களின் இசை வாழ்வும் பணியும்



## கலாபூஷணம் .திரு.எல். திலகநாயகம் போல்
## அவர்களின் ஞாபகார்த்தக் கையேடு – I

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் . திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின்
6 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக
05. 12. 2015 அன்று
ஸ்ரீ ராகவேந்த்ர ம்ருத்திகா ப்ருந்தாவனத்தில் நிகழ்த்தப்பட்ட
" திலகார்ப்பணம்"
நிகழ்வின் போது வெளியிடப்பட்டது.



தொகுப்பாளர் :

கலாவித்தகர். திருமதி. குமுதா. உமாகாந்தன்
(சென். ஜோண்ஸ் கல்லூரி ஆசிரியர்)
"சோமராகம்"
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எனது இசைக்குருவான சங்கீதபூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவாக 05.12.2015 சனிக்கிழமை அன்று நடாத்தப்படும் "திலகார்ப்பணம்" நிகழ்வில் எனது குருவின் குருவான சங்கீதபூஷணம் திரு. ச. பாலசிங்கம் ஐயா அவர்களை கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இது எனது குருவிற்கு நான் செய்யும் காணிக்கையாகும்.

"ஒரு கலைஞனை இறந்த பின் போற்றுவதை விட அவன் வாழும் காலத்திலேயே அவனைப் போற்றி கௌரவிக்க வேண்டும்" என்று திலகநாயகம் போல் அவர்கள் எப்போதும் குறிப்பிடுவார். அவரது எண்ணத்திற்கு இணங்க அவரது நினைவாக "திலகார்ப்பணம்" நிகழ்வை வருடா வருடம் நடாத்த எண்ணியுள்ள நான், அதன் போது அவரது ஞாபகார்த்தமாக ஒரு கலைஞரை கௌரவித்து அவரது இசைப்பணி பற்றிய குறிப்பை அச்சிட்டு மாணவர்களிற்கு அறியத் தர வேண்டும் என விரும்புகின்றேன்.

இதன் முதற்கட்டமாகவே மூத்த இசைக்கலைஞரும், எனது குருவின் குருவுமான சங்கீதபூஷணம் திரு. எஸ். பாலசிங்கம் அவர்களுடைய இசை வாழ்வும் பணியும் பற்றிய கையேட்டை வெளியிடுகின்றேன்.

இவ் விழாவிற்கு எனக்குப் பூரண ஒத்துழைப்பை நல்கிய திரு எஸ். பாலசிங்கம் அவர்களுடைய குடும்பத்தினருக்கும், எனது குருவின் குடும்பத்தினருக்கும், குறிப்பாக அவரது புதல்வி திருமதி. பிரியம்வதா மக்ஸ்மிலன் அவர்களிற்கும், எனதுகுடும்பத்தினர், எனது மாணவர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள் அனைவரிற்கும் தாழ்மையான நன்றியறிதலைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

எனது இக் கன்னி முயற்சிக்கு அனைவரும் தமது ஆதரவையும், வழிகாட்டலையும் தருவார்கள் என எதிர்பார்ப்பதோடு எதிர்வரும் காலங்களில் சிறப்பாக இதனை செயற்படுத்தத் தமது பூரண ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் தரவேண்டும் என பெரியோர்களை வேண்டி இதனை உங்கள் கைகளில் தவழ விடுகின்றேன்.

திருமதி. குமுதா உமாகாந்தன்
"சோமராகம்" இசைமன்றம்,
சென்ஜோண்ஸ் கல்லூரி,
இசை ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கீத பூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்களின் இசை வாழ்வும் பணியும்.

**பிறப்பிடம் :** யாழ்ப்பாணம் அரியாலையூர்

**பெற்றோர் :** சபாபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியர்.

**பிறந்த காலம் :** 15. 09. 1529

**தந்தையார் :** திரு. பெரியதம்பி சபாபதிப்பிள்ளை.

1920களிலிருந்து 60கள் வரையான காலப்பகுதியில் பிரபல அண்ணாவியராகத் திகழ்ந்தவர் பெரியதம்பி சபாபதிப்பிள்ளை அவர்கள். அக் காலத்தில் பல சிறந்த நாடகங்களை மேடையேற்றி புகழ் பெற்ற இவர் வயலின், ஹார்மோனியம் என்பவற்றை இசைக்கும் திறனுடையவர். சதி அனுசூயா, பவளக்கொடி, கிருஷ்ணன் தூது, தூக்குத் தூக்கி,நளன் தமயந்தி, மனோகரா, பனையரசன், இளங்குமரன், காத்தவராயன், யயாதி, பதிபக்தி, அபிமன்யு, பூதத் தம்பி என்பவை இவர் மேடையேற்றிய நாடகங்களில் சில. இப் பிரபல அண்ணாவியார் பெரியதம்பி சபாபதிப் பிள்ளையவர்களின் 6 வது புத்திரரே திரு. ச. பாலசிங்கம் அவர்கள்.

**சகோதரர்கள் :**

பாலசிங்கம் அவர்களிற்கு மூன்று ஆண் சகோதரர்களும், 4 பெண் சகோதரர்களும் ஆவர். மூத்த சகோதரர் துரையப்பா மிகுந்த இசைஞானமுடையவர். எனினும் "சங்கீதபூஷணம்" பட்டம் பெற இருக்கும் தறுவாயில் இறைவனடி சேர்ந்தார். ஏனைய நடேசர், கணேசர் ஆகியோர் ஹார்மோனியம் இசைப்பதிலும், நாடகங்கள் நடிப்பதிலும் தந்தைக்குத் துணையாக நின்றனர். பெண் சகோதரிகளான அம்பிகா, அம்பாலிகை இருவரும் இசைத்துறையில் மிளிரவில்லை எனினும், இவரது இளைய சகோதரி இராதாதேவி அவர்களும் இவர் போன்றே ஓர் சிறந்த இசையாசிரியரும், இசைக் கலாவித்தகரும் ஆவார்.

செல்வி.இராதாதேவி அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும், மேடைகளிலும் தனது குரல் வண்ணத்தைக் காட்டியவர். தனிப்பட்ட பல இசை வகுப்புக்களை நடாத்தியதுடன், அரியாலை விசுவநாதன் இசைக் கல்லூரியிலும், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்திலும் இசையாசிரியராகக் கடமை ஆற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரம்பக் கல்வி :**

பாடசாலைக் கல்வியை யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும், அரியாலை. ஸ்ரீ. பார்வதி வித்தியாசாலை, கனகரெத்தினம் மகா வித்தியாலயம், யாழ். பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றுக் கொண்டார்.

**இசைக்கல்வி :**

ஆரம்பத்தில் தனது தந்தையாரிடம் கர்நாடக இசையைப் பயின்ற இவர், 1952 ஆம் ஆண்டு காலத்தில் பிரபல பாடசாலையாக விளங்கிய பரமேஸ்வராக் கல்லூரியில் சங்கீதபூஷணம் திரு. ந.ஷண்முகரத்தினம் அவர்களிடம் ஒரு வருடம் இசை கற்றார். பின்னர் அக்கால தென்னிந்திய திருச்சி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட "இசைப் பயிற்சி" எனும் நிழ்ச்சியைத் தவறாது கேட்டும், அதனை ஹார்மோனியத்தில் வாசித்தும் பயிற்சி செய்து தனது சொந்த முயற்சியில் இசையறிவை வளர்த்துக் கொண்டார்.

இதேவேளை தனது தந்தையாரின் நாடகங்களுக்கும், யாழ். குடா நாடு மட்டுமன்றி, வெளி மாவட்டப் பாடசாலை நிகழ்ச்சிகளுக்கும் ஹார்மோனியம் வாசித்து பிரபல்யம் பெற்று விளங்கினார்.

தந்தையாரின் நாடகத்துறையிலும் இவர் சளைத்தவர் அல்லர். 1949, 50, 51 காலப் பகுதியில் தந்தையாரின் நள்ன் தமயந்தி நாடகத்தில் தமயந்தியாக நடித்து பாராட்டுப் பெற்றதுடன், அமுதவல்லி (மந்திரி குமாரி), உண்மையின் வெற்றி (அரக்கு மாளிகை), மனோன்மணி போன்ற நாடகங்களிலும் நடித்துத் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

1955 ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசை கற்கச் சென்ற இவர் 1959 ஆம் ஆண்டு "சங்கீத பூஷணம்" பட்டம் பெற்று தமிழிசையை வளர்க்க வேண்டும் எனும் கொள்கையோடு நாடு திரும்பினார்.

இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசையரசு M. M. தண்டபாணி தேசிகர், சங்கீதபூஷணம் T. K. ரங்காச்சாரியார், மன்னார்குடி இராஜ கோபால் பிள்ளை, T. N. சிவசுப்பிரமணியம் பிள்ளை, மயிலம். P. வஜ்ரவேல் முதலியார், S. பார்த்தசாரதி ஆகியோரிடம் இசை பயின்று தனது இசையறிவை மேலும் மெருகூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாவது அரங்கேற்றம் :**

பாலசிங்கம் அவர்கள் “சங்கீதபூஷணம்” பட்டம் பெற்று நாடு திரும்பியதும் அனைவரதும் விருப்பத்திற்கு இணங்க 1959 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ஆம் திகதி யாழ். நகரசபை மண்டபத்தில் அக்கால அரசாங்க அதிபர். திரு. ம. ஸ்ரீ காந்தா தலைமையில் இவரது அரங்கேற்றம் சிறப்புடன் நடைபெற்றது. கம்பீரமான தோற்றமும், வசீகரிக்கும் ஆளுமையான குரலும் அனைவரையும் தமிழிசையில் அன்றே நனைய வைத்தது.

இதற்கு அண்ணிசைக் கலைஞர்களாக :

| | |
|---|---|
| வயலின் | : வித்துவான். S. சோமஸ்கந்தசர்மா |
| மிருதங்கம் | : சங்கீதபூஷணம். A.S. இராமநாதன் |
| கடம் | : வித்துவான். P.S. ஆறுமுகம்பிள்ளை |
| கெஞ்சிரா | : வித்துவான். வண்ணை. K. கணேசப்பிள்ளை |

ஆகியோர் பங்கேற்றனர்.

**குடும்ப வாழ்வு :**

1964 ஆம் ஆண்டு சித்திரை 4 ஆம் திகதி நல்லூர் முருகன் கோவிலில் எழிமையான முறையில் நல்லூரைச் சேர்ந்த நாகேஸ்வரியை திரு. பாலசிங்கம் அவர்கள் திருமணம் செய்து கொண்டார். இவருடைய வாழ்வின் இசைத்துறை வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், அமைதியான வாழ்விற்கும் தமது துணைவியாரே காரணம் என பல சந்தர்ப்பங்களில் மகிழ்வுடன் கூறியுள்ளார். இன்று வரை அவரது உற்ற துணையாக திகழ்பவர் திருமதி. நாகேஸ்வரி அம்மா அவர்களே.

இல்லற வாழ்வின் பயனாக மூன்று பெண்பிள்ளைகளைப் பெற்றதுடன் மூன்று பேருமே கலைத்துறையில் மிளிர்வதும், பேரக் குழந்தைகள் கலைத்துறையில் உருவாகி வருவதும் சிறப்பிற்குரியது. மூத்த மகள் கல்யாணி சுதர்சன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இசைத் துறைப் பட்டதாரி. தனது கல்வியைத் தொடர்ந்து 3 வருடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றி தொடர்ந்து கனடா சென்று அங்கு “ஏழிசை மதுரகானசபா” எனும் மன்றத்தை இயக்கி வீணை, வாய்ப்பாட்டு இரண்டையும் வளர்த்து வருகிறார். இவர் சிறந்த “வைணிக” வித்துவான் ஆவார். (வீணை இசைக் கலைஞர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மகள் அமிர்தவர்ஷினி உதயகரன் நோர்வேயில் நடனக் கலைஞராக உள்ளார். அங்கு தனது திறனை வெளிப்படுத்தி கலையை வளர்த்து வருகின்றார். மூன்றாவது மகள் பாலினி கண்ணதாசன் யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றுவதுடன், நடனக் கலைஞராகவும் திகழ்கின்றார். இவரது கணவர் திரு. க. கண்ணதாசன் புகழ் பூத்த மிருதங்க வித்துவான் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவரும் சேர்ந்து "ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம்" எனும் மன்றத்தை ஆரம்பித்து மிருதங்க, நடனக் கலைகளை வளர்த்து வருகின்றனர். இவர் தனது பேரக் குழந்தைகளின் அரங்கேற்றத்தையும், தரமான நிகழ்ச்சிகளையும் மேடைகளில் கண்டு அக மகிழ்ந்து வருகின்றார்.

இவ்வாறு திரு. பாலசிங்கம் அவர்களுடைய இசைச் சேவையின் பயனாக அவரது குடும்பமே கலைக் குடும்பமாக மிளிர்வதை கண்கூடாக காணமுடிகின்றது.

**இசைப் பணி :**

தனது அரங்கேற்றத்தின் பின்னர் முதலாவதாக கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் இசையாசிரியராகக் கடமையேற்றார். அத்துடன் அமரர் சங்கீதபூஷணம் திரு. ஆ. நமசிவாயம் அவர்களால் ஆரம்பித்து நடாத்தி வந்த யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் இசையாசிரியராகக் கடமையாற்றும்படி கேட்டதற்கிணங்க அங்கு 1959 - 1995 வரையான காலப்பகுதியில் தமிழிசையைக் கற்பித்து வந்தார். திரு. பாலசிங்கம் அவர்கள் இவ் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் ஆசிரியராக மட்டுமன்றி பல ஆண்டுகள் மன்றத்தின் செயலாளராகவும் செயற்பட்டு மன்றத்தின் செயற்பாடுகளில் தனது முழுப் பங்களிப்பையும் நல்கினார். அம் மன்றத்தின் மாணவர்கள் இன்று சிறந்த கலைஞர்களாகத் திகழ்கின்றனர்.

தனது சொந்த இடமான அரியாலையிலும் இசையினை வளர்க்க வேண்டும் எனும் நோக்கில் அரியாலை சித்தி விநாயகர் ஆலயச் சூழலில் அமரர். விசுவநாதன் இசைக் கல்லூரியினை ஆரம்பித்து இசை வகுப்புக்களை நடாத்தி அங்கு பல மாணவர்களை உருவாக்கினார். தனிப்பட்ட வகுப்புக்களை நடாத்தி வந்ததுடன், தமிழிசை விழாக்களை வருடா வருடம் நடாத்தியும் வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் என்பவற்றில் அதி விசேட பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இசைக் கலைஞராக தனது இசைக்கச்சேரிகள், பண்ணிசைக் கச்சேரிகள் ஆகியவற்றை நடாத்தி புகழ் பெற்றவர். இன்று எம்மவரிடையே மிக மூத்த கலைஞராக, தனது மனைவி, மகள், பேரப் பிள்ளைகளுடன் ஒரு வழிகாட்டியாக இருந்து தனது இசையோடிணைந்த அமைதியான வாழ்வைத் தொடர்ந்து வருகின்றார்.

**இவருக்குக் கிடைத்த பட்டங்களும் கௌரவங்களும் :**

இவரது இசைத் தொண்டைப் பாராட்டும் முகமாக யாழ். திருமறைக் கலா மன்றம் 1993 ஆம் ஆண்டு கௌரவித்தது. 2003 ஆம் ஆண்டு கனடாவில் இளங் கலைஞர் மன்றத்தினர் "கான சொரூபி" எனும் பட்டமளித்து கௌரவித்ததுடன் பொற்கிளியும், தங்கப் பதக்கமும் அளித்தனர். தொடர்ந்து கனடா வாழ் அரியாலையூர் மக்களும் மதிப்பளித்து கௌரவித்தனர். கனடா தமிழிசைச் சங்கத்தினரும் பாராட்டிக் கௌரவித்தனர்.

வட இலங்கை சங்கீதசபை 2013 ஆம் ஆண்டு இவரது இசைச் சேவையைப் பாராட்டி கௌரவித்தது. அகில இலங்கை கம்பன் கழகம் இவரது சேவையைப் பாராட்டி - 2014 கம்பன் விழாவில் கௌரவித்தது. யாழ் மாவட்டச் செயலகத்தின் கலை கலாசாரப் பேரவை 2015 ஆம் ஆண்டு யாழ். முத்து விருது வழங்கிக் கௌரவித்தது.

வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறைத் திணைக்களம் 2015 ஆம் ஆண்டிற்கான "வட மாகாண முதலமைச்சர்" விருதினை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவர்களுடைய சிறந்த மாணவர்களுட் சிலர் :**

திருமதி. குணபூஷணம் நாகராசா (நோர்வே), சங்கீத கலாவித்தகர் திரு. சி. நாகராசா (யாழ்ப்பாணம்), இசைக் கலாவித்தகர் திருமதி. நவமணி பத்மநாதன் (கொழும்பு), இசைக்கலைமணி செல்வி. கிருஷ்ண வேணி மயில்வாகனம் (யாழ்ப்பாணம்), இசைக்கலைமணி திருமதி. சக்திதேவி சிவகுமார் (யாழ்ப்பாணம்), இசைக் கலைமணி திருமதி. கலாராணி ஸ்ரீஸ்கந்தராசா (கொழும்பு)சங்கீத வித்துவான் திரு. எஸ். தில்லைமணி, சங்கீத வித்துவான் திரு. பூ. யாதவன் (லண்டன்), இசைக்கலைமணி திருமதி. சாந்தகுமாரி கமலகாந்தன் (முல்லைத் தீவு) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவருக்கும் மேலாக மறைந்த புகழ் பூத்த இசைமேதை சங்கீத பூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்களும் திரு. எஸ். பாலசிங்கம் அவர்களின் முதன்மை மாணவர்களில் ஒருவராவர்.


**இசைச் சிறப்பு :**

பாலசிங்கம் தண்டபாணி தேசிகரின் மாணவர் என்பதுடன் தமிழில் மிகுந்த பற்று உடையவர் என்பதால் தண்டபாணி தேசிகரின் உருப்படிகளை மிகவும் விரும்பித் தனது கச்சேரிகளில் பாவத்துடன் இசைப்பது மட்டுமன்றி, மாணவர்களிற்கும் அதை விரும்பிக்கற்பிப்பார். இவருடைய பாடல்களில் அனைவராலும் விரும்பிக் கேட்கப்படுவது அமிர்தவர்ஷினி ராகத்திலமைந்த “எனை நீ மறவாதே அங்கயற் கண்ணியே” எனும் பாடலாகும். இதனை அவர் பாடி அனைவரதும் உள்ளத்தை ஈர்த்துவிடுவார். அதே போல் “சினமடையாதே சீறி விழாதே” எனும் பகுதாரி உருப்படியை மிகுந்த அமைதியான சுபாவமுடைய இவர் பாடுவது மட்டுமன்றி பல மாணவர்களிற்கு அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் கற்பித்தார். இவை இசையோடு மாணவர்களின் மனதில் ஆழப்பதியக் கூடிய கருத்துக்கள் ஆகும்.

இவற்றை விட பல தமிழ்ப் பாடல்களைத் தானே யாத்திருக்கின்றார். பல திருமண நிகழ்ச்சிகளில் கச்சேரி நிகழ்த்திய இவர் அந் நிகழ்விற்கு ஏற்ப பொருள் செறிந்த பாடல்களைப் பாடுவதில் வல்லவர். மரபு தவறாத சம்பிரதாய சங்கீதத்தை தமிழிசையாக தன் இனிய கம்பீரமான குரலின் மூலம் அள்ளி வழங்கும் தன்மையுடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பெரியோர்கள் போற்றுதற்குரியவர்கள், அவர்களின் புலமையும், அனுபவமும் இன்றைய எம் தலைமுறையினரிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. அவர்களைப் போற்றிப் பணிவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் :- முருகனைத்தினமும்
**இராகம்:-** திலங்
தாளம்:- ஆதி
இயற்றியர் :- சு. பாலசிங்கம்

## பல்லவி

1₄ O O

;,ச்சா ச்சா நி ச்சா பா, மா |; கமாபமா | கா;; சா ||
முரு கனைத் தினமும் நி னை மன மே .. மால்
;,ச ம க மா பா நி மா பா |; ச் க்கா நிச் , | பா, மகமப ||
.. மரு கனைத் தெய்வ யானை வள் , வி ம ணா ளன் ...
நிச்க (முரு)

## அநுபல்லவி

;,மகமபா ச்நிச்சா |;, ச்சா க்சா | ச்சா ச்சா ச் நி பா ||
தீ . ரைட் ச . கன் .. திவ்ய சொ ரூ .. பன் . .
;,ச்சா க் க்கா க்ப்மக ச்நி சா|;, நி ச் பா | பா ;மக ||
.. தே வர் து யா... தீர்த்த தீரன் குண சீ . லன் ....
நிச்க் (முரு)

## சரணம்

; க சா கமா பா ; பா பா |; ப ச்சா நி சா | பா , நிபம கா ||
.. கந் . தா . கடம் பா . கதிர் கா ம வே. லா .
;,மா மா க மா , க ம க சா |;, சா கா ம | பா ,நி சா பா ||
.. சிந் தா கு லம் . தீர்த் த குன் றக்கு டிக் கு ம ரா
;, பநிப. காமா பநீநி ச்சா ச்சா |;, ச்சா க்கா ச | ச்சா , நி ச்சா பா ||
.. ஷேரந் தார்க்கருள் புரியும்.. முக்கண்ண னின் மை ந் தா
;, ச்சா க்கா க் ப் ம் க் ச் நி ச்சா |;, நி ச் நி பா | பா ; மக ம ப ||
கந் தா கூகந் தா. வென்று .. பா லன் நி த மும் பா.

நிச்க் (முரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org